# சுற்றுச்சூழல் ஊடகவியல் பற்றிய

## வழிகாட்டல் கையேடு



USAID
FROM THE AMERICAN PEOPLE

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

# சுற்றுச்சூழல் ஊடகவியல் பற்றிய வழிகாட்டல் கையேடு

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் (SLPI)

இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் (SLPI) என்பது இலங்கையில் ஊடக அபிவிருத்தி மற்றும் நெறிமுறைக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் முன்னணி நிறுவனமாகும். இது ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல், இலங்கை ஊடகவியல் கல்லூரி (SLCJ) ஊடாக இளம் ஊடகவியலாளர்களை உருவாக்குதல், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு (PCCSL) வழியாக ஊடகத்துறையின் சுய ஒழுங்குமுறைமையை ஊக்குவித்தலுடன் சுதந்திரமான மற்றும் பொறுப்புமிக்க ஊடகத்துக்காக குரல் கொடுத்தல் முதலிய பணிகளை ஆற்றிவருகிறது. இலங்கை பத்திரிகை ஸ்தாபனமானது ஊடகப்பணியை தொழில்மயமாக்குதல் மற்றும் ஊடக சுதந்திரத்துக்காக குரல் கொடுத்தலுடன் நாட்டின் ஜனநாயகத்தை பராமரித்து வளர்ப்பதற்கும் தன்னை அர்ப்பணித்துள்ளது.

©2023 இலங்கை பத்திரிகை ஸ்தாபனம். அனைத்து உரிமைகளும் காப்புடைமையானவை.

**Disclaimer**

This handbook is made possible by the support of the American People through the United States Agency for International Development (USAID). The contents of this handbook are the sole responsibility of the contractor and do not necessarily reflect the views of USAID or the United States Government.

சுற்றுச்சூழல் ஊடகவியல் பற்றிய வழிகாட்டல் கையேடானது, பின்வரும் நிபுணர்களின் கருத்துக்களை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது. (பெயர்கள் அகர வரிசையில் உள்ளன):

- டென்னிஸ் மொம்பர்
- கலாநிதி. ஜகத் குணவர்தன
- கமந்தி விக்ரமசிங்க
- குமுதினி ஹெட்டியாராச்சி
- கலாநிதி. ரங்கிகா பண்டார
- பேராசிரியர் சரத் கோட்டகம
- சரோஜ் பத்திரண
- சிர்லி உபுல் குமார
- கலாநிதி. துஷிதா சுகதபால

USAID இலங்கையின், அதிகரித்த தேவை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான ஈடுபாட்டின் (Increased Demand and Engagement for Accountability - IDEA) நிதியிலிருந்து இந்த கையேட்டிற்கான நிதி பெற்றுக்கொள்ளப்பட்டது. இந்த வழிகாட்டல் கையேட்டினை கசென்ரா டூல் தொகுத்துள்ளார்.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்திடம் இருந்து எழுத்துப்பூர்வமான அனுமதியை பெற்றுக்கொள்ளாமல், இந்தப் பிரசுரத்தின் எந்தப் பகுதியையும் எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மீளுருவாக்கம் செய்யவோ வெளியிடவோ முடியாது.

**தொடர்புகளுக்கு:**
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
96, கிருல வீதி,
கொழும்பு - 05
P: +94 (0)11 5 353 635
F: +94 (0)11 5 335 500
info@slpi.lk
www.slpi.lk

---

வழிகாட்டல் கையேட்டினை இந்த இணைப்பிலிருந்து இலவசமாக தரவிறக்கிக்கொள்ள முடியும்.
www.slpi.lk/research-and-surveys/

# உள்ளடக்கம்


**அறிமுகம்** **6**

வழிகாட்டல் கையேட்டின் நோக்கம் என்ன? **7**

**சுற்றுச்சூழலும் ஊடகமும்** **8**

சுற்றுச்சூழல் ஊடகவியல் ஏன் முக்கியமானது? 9

சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்து அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் 9

சூழலியல் செய்திகளின் வகைகளும் கருப்பொருட்களும் 10

**சுற்றுச்சூழல் அறிக்கை பற்றிய வழிகாட்டுதல்கள்** **11**

கதையை தெரிவுசெய்தல் 12

சுற்றுச்சூழல் அறிக்கையிடலுக்கான அடிப்படை வழிகாட்டுதல்கள் 13

1. சரியான வினாக்களை கேளுங்கள் 13
2. ஆழமான ஆய்வு 13
3. நிபுணர்களின் கருத்து 14
4. மொழி 14
5. விஞ்ஞானத்தின் முக்கியத்துவம் 14
6. சட்டபூர்வ அம்சத்தின் முக்கியத்துவம் 14
7. அரசியல் அம்சத்தின் முக்கியத்துவம் 15
8. அளவியல் தரவு மற்றும் புள்ளிவிபரங்களின் முக்கியத்துவம் 15

**சுற்றுச்சூழல் அறிக்கையிடலுக்கான படிப்படியான வழிகாட்டி** **16**

படிமுறை ஒன்று: நீங்கள் ஆய்வினை மேற்கொள்ளுங்கள் 17

படிமுறை இரண்டு: வினாக்கொத்தினை உருவாக்கவும் 17

படிமுறை மூன்று: நிபுணர்களுடன் உரையாடவும் 17

படிமுறை நான்கு: முதலாவது வரைவை தொகுக்கவும் 18

படிமுறை ஐந்து: தகவல்களை இருதடவைகள் சரிபார்க்கவும் 18

படிமுறை ஆறு: திருத்தியமைக்கவும் 18

படிமுறை ஏழு: பின்தொடருங்கள் 18

**கவனிக்கவேண்டிய விடயங்கள்** **19**

1. தவறான கலைச்சொற்கள் 20
2. தகுதியற்ற நிபுணர்கள் / உறுதிசெய்யப்படாத மூலங்கள் 20
3. நிகழ்ச்சிநிரல் அடிப்படையிலான கருத்துக்கள் 20

**கலைச்சொற்கள்** **21**

**மூல தரவுத்தளம்** **26**



# அறிமுகம்

ஊடகத்துறையை பொறுத்தவரை உலகம் முழுதும் பல்வேறு ஊடக நடைமுறைகள் உள்ளன. சுற்றுச்சூழலில் மனித நடவடிக்கைகளின் பாதகமான விளைவுகள் அதிகரித்து வருவதால், அச்சு, இலத்திரனியல் அல்லது அண்மைக்காலமாக பிரபலமாகியுள்ள டிஜிட்டல் ஊடகம் என எதுவாக இருந்தாலும் சுற்றுச்சூழல் ஊடகவியல் மற்றும் அறிக்கையிடல் ஆகியன தற்போது முக்கியத்துவம் பெற்றுள்ளன.

சுற்றுச்சூழல் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் பிரபலமாக பேசப்படும் தலைப்பாக காணப்படுகின்றது. காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல், நிலைபேறான அபிவிருத்தி மற்றும் மனிதகுலத்தின் எதிர்காலம் ஆகியவற்றின் விளைவுகள் பெரும்பாலும் சுற்றுச்சூழல் குறித்த பரந்த உரையாடலுடன் அவ்வப்போது இணைக்கப்பட்டுள்ளன. புவியின் இயற்கையான செயன்முறையின் மீது மனிதர்கள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர் மற்றும், சில சந்தர்ப்பங்களில் இது காப்பாற்ற முடியாதளவுக்கு மோசமான நிலையை எட்டியுள்ளதாக புவி ஆரோக்கியம் குறித்த அனைத்து உலகளாவிய மதிப்பீடுகளும் சுட்டிக்காட்டுகின்றன. எனினும், சுற்றுச்சூழல் அறிக்கையிடலானது, சில சந்தர்ப்பங்களில் ஊடகவியலில் குறிப்பிடத்தக்க பகுதியாக கருதப்படுவதில்லை.

இது, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பான அறிக்கையிடல் பின்தள்ளப்பட வேண்டும் என்றோ, தரநிலைகள் அல்லது பொறுப்புக்கூறலின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றோ அர்த்தப்படாது. ஊடகவியலின் தரநிலைகளுக்கு மேலதிகமாக, சுற்றுச்சூழல் அறிக்கையிடலில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் சில உண்டு. அந்தவகையில், சுற்றுச்சூழல் அறிக்கையிடல் பற்றிய இந்த வழிகாட்டல் கையேடானது, சுற்றுச்சூழல் ஊடகவியலாளராக செயற்படுவதற்கான திறன்களை மேம்படுத்த உதவும் வகையில், சுற்றுச்சூழல் அறிக்கையிடலின் அடிப்படைகளை வழங்குகின்றது.

## வழிகாட்டல் கையேட்டின் நோக்கம் என்ன?

எல்லாவற்றிற்கும் முதலாக சுற்றுச்சூழல் ஊடகவியலாளர்கள், இயற்கை மற்றும் நிலைபேறுமிக்க மாற்றத்திற்கான பரிந்துரை செயற்பாட்டாளர்களாக (குரல் கொடுப்போராக) செயற்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பொறுப்புமிக்க நுகர்வு மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் என்பவற்றை அடிப்படையாக கொண்ட தகவலறிந்த சமூகமே, ஊடகவியலின் முக்கிய நோக்கமாக காணப்படுகின்றது. எனினும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை பொதுமக்களுக்கு உணர்த்த முயல்வது இலகுவானதல்ல. இயற்கை வளங்கள் எல்லையற்றவை என்றும் அவர்களது கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாகவும் மக்களின் மனநிலை காணப்படுகிறது. இந்த இயற்கை வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் விடயம் பற்றி அறிக்கையிடப்படவேண்டிய, அதுபற்றி கலந்துரையாடப்படவேண்டிய அளவுக்கு முக்கியமான பிரச்சினையாக இது கருதப்படுவதில்லை.

சுற்றுச்சூழல் பிரச்சினைகளை அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள், கீழ்வருவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சவால்களை எதிர்கொள்கின்றனர். அவை குறித்து இந்த வழிகாட்டல் கையேட்டில் கலந்துரையாடப்படும்.

1. சுற்றுச்சூழல் அறிக்கையிடல் பற்றிய போதுமான பயிற்சியின்மை.
2. தரவு, விஞ்ஞான அறிவு மற்றும் நிபுணர்களின் கருத்துக்களை பெறுதல் ஆகியவற்றிற்கான வரையறுக்கப்பட்ட அணுகல்.
3. சுற்றுச்சூழல் விடயங்களை அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் நிபுணர்கள் / செயற்பாட்டாளர்களுக்கு இடையிலான தொடர்பற்ற நிலை.
4. கருத்து வேறுபாடுகள் மற்றும் தீர்க்கப்படாத பிரச்சினைகள்.
5. அரசியல், பொருளாதாரம், பயங்கரவாதம், வறுமை போன்ற ஏனைய விடயங்களின் காரணமாக, சுற்றுச்சூழல் அறிக்கையிடலுக்கு முன்னுரிமை அளிக்கப்படாமை.

இந்த சவால்களை இனங்கண்டு அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதே இந்த வழிகாட்டல் கையேட்டின் நோக்கமாகும். ஒவ்வொரு கதையும் தனித்துவமானதும் வித்தியாசமானதுமாகும். அத்தோடு, அடையாளம் கண்டு நாம் இலக்குவைத்த பார்வையாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட முறையில் அதனை தெரிவிப்பது அவசியம். இந்த வழிகாட்டல் கையேடானது, சுற்றுச்சூழல் அறிக்கையிடலில் இன்றுவரை காணப்படும் சில இடைவெளிகளை அடையாளம் காட்டுவதோடு, அவை எவ்வாறு நிவர்த்தி செய்யப்படலாம் என்பதற்கான அடிப்படை வழிகாட்டுதல்களை வழங்குகின்றது, சுற்றுச்சூழல் ஊடகவியலின் முக்கிய சொற்களின் விளக்கத்தை வழங்குகின்றது மற்றும் பயனுள்ள மூலங்களை பட்டியலிடுகின்றது. இவற்றின் மூலம், ஊடகவியலாளர்களின் எழுத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பல்வேறு கருவிகளை வழங்குகிறது.



# சுற்றுச்சூழலும் ஊடகமும்

தகவலறிந்த தீர்மானங்களை எடுப்பதற்கு வழிவகுக்கும் துல்லியமானதும் நம்பகமானதுமான உண்மைத் தகவல்களை வழங்குவதால், சமூகத்திற்கு ஊடகம் இன்றியமையாததாகும். தகவல்களை பரப்புவதற்கு முன்னர் உண்மைகளை ஒருங்கிணைத்து சரிபார்க்கின்றமை இதன் தொழில்முறை ஒழுக்கமாகும்.

சுற்றுச்சூழல் அபாயம் குறித்த பொதுமக்களின் கருத்தை ஊடகங்கள் பெரிதாக்கி, சுற்றுச்சூழல் சார்பு நடத்தையை பாதிக்கிறது என பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன (Xu & Han, 2019). ஆகவே, பொதுமக்களுக்கு விழிப்புணர்வை அதிகரிக்கவும், பொது ஈடுபாடு மற்றும் அதிகாரமளிப்புக்கு வழிவகுக்கும் பொது அணிதிரட்டலுக்கான இலக்கை அதிகரிக்கவும், பொதுமக்களுக்கு துல்லியமான தகவல்களை வழங்குவது என்பது சுற்றுச்சூழலைப் பற்றி அறிக்கையிடும் ஊடகவியலாளரின் பொறுப்பாகும்.

***ஊடகவியலின் ABC எனப்படுவது – துல்லியம் (accuracy), சுருக்கம் (brevity), மற்றும் தெளிவு (clarity) ஆகியனவாகும். - உணர்திறன்*** மற்றும் ***பாதிப்பை எதிர்கொள்ளக்கூடியவர்களுக்கு குரல் கொடுப்பது*** ஆகியவை ஒரு ஊடகவியலாளர் ஒரு கதையை எழுதும்போது பின்பற்றவேண்டிய முக்கிய விடயங்களாகும்.

சாதாரண மக்களின் பாஷையில், ஊடகவியல் என்பது மக்களை விடயம் தெரிந்தவர்களாக வைத்திருக்கும் வகையில் அவர்களுக்கு துல்லியமான தகவல்களை அறிக்கையிடுவதாகும். மக்கள் சரியான நேரத்தில் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும்போது, அவர்கள் தகவலறிந்து தீர்மானங்களை எடுக்க முடியும். அவர்களின் நடத்தையை மாற்றலாம், விழிப்புணர்வை அதிகரிக்கலாம் மற்றும் கொள்கையில் செல்வாக்கு செலுத்தலாம். வேறு வகையில் கூறுவதாயின், விடயங்களை வெளிப்படுத்த ஊடகவியலாளர்கள் எழுதுகின்றனரே தவிர, ஈர்ப்பதற்காக எழுதுவதில்லை.

சுற்றுச்சூழல் அறிக்கையிடலின்போதும், ஊடகவியலின் அடிப்படை அவ்வாறே காணப்படும். மக்களுக்கு விடயங்களை தெரிவிக்கும் அதே சந்தர்ப்பத்தில், ஊடகவியலாளர்கள் தாங்களாகவே குரலற்றவர்களுக்காக செயற்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு ஆரோக்கியமான கதையை வெளிக்கொண்டு வருவதற்காக, சில மேலதிக கூறுகள் சேர்க்கப்படும்.

வாழ்விடங்களின் சிதைவு மற்றும் சீரழிவு, காலநிலை மாற்றம் மற்றும் ஏனைய பேரழிவுகள் உள்ளிட்ட உலகின் சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் ஒரு தனித்துவமான பங்கை சூழலியல் ஊடகவியலாளர் கொண்டிருக்கின்றார். மொத்தத்தில் சூழலியல் ஊடகவியலாளர்கள் தமது பணியின் ஊடாக, சுற்றுச்சூழல் கல்வியை ஊக்குவிப்பதுடன், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

## சுற்றுச்சூழல் ஊடகவியல் ஏன் முக்கியமானது?

எளிமையாக கூறுவதாயின், சுற்றுச்சூழல் தொடர்பாக அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள் சுற்றுச்சூழல் தொடர்பாகவும், சுற்றுச்சூழல் அழிவு மற்றும் மாசுபாட்டினால் பாதிக்கப்பட்ட தரப்பு சார்பாகவும் பேசுவர்.

உதாரணமாக, இலங்கையின் முக்கிய சமூக-பொருளாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளில் ஒன்றாக மனித - யானை மோதல் காணப்படுகின்றது. இது கணிசமானளவு கவனத்தை ஈர்த்துள்ளது மற்றும் இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஒரு மனிதனின் மரணத்திற்கு காரணமான யானைத் தாக்குதல் பற்றி அறிக்கையிடும் ஊடகவியலாளர், குறித்த கதையை எவ்வாறு அறிக்கையிட வேண்டும் என்பதில் கவனஞ்செலுத்த வேண்டும்.

சுற்றுச்சூழல் தொடர்பான செய்திகளை அறிக்கையிடும் முறையானது, பொதுமக்கள் அதற்கு எவ்வாறு பதிலளிக்கின்றனர், செயற்படுகின்றனர், மற்றும் நீண்டகாலமாக, அரசாங்கக் கொள்கைகள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆகவே, ஊடகவியலின் அடிப்படைகளுக்கு மேலதிகமாக, சகல சூழலியல் ஊடகவியலாளர்களும் பின்வரும் விதிமுறைகளையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

### சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்து அறிக்கையிடும் ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

- சுற்றுச்சூழல் பற்றிய அறிக்கையிடலுக்கு வரையறுக்கப்பட்ட இடம் அல்லது ஒளிபரப்பு நேரத்தினை ஒதுக்குதல்.
- பல வெளிப்புற காரணிகள் காரணமாக செய்திக் கட்டுரைகளை அல்லது அறிக்கைகள் வெளியிடப்படாமை.
- துல்லியமான தகவல்களையும் மூலங்களையும் பெறுவதில் காணப்படும் சிக்கல்.
- செய்தி அறிக்கையிடலின் உரிய காலம்.
- தொடர்புடைய மூலங்களைப் பெற்றுக்கொள்ளுதல்
- நவீன சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பான சிக்கலான கேள்விகள்
- அறிக்கையிடலின் விஞ்ஞான அம்சத்தைக் விளங்கிக்கொள்வதில் காணப்படும் சிரமம்
- அரசியல் அல்லது ஏனைய வெளிப்புற தாக்கங்கள் காரணமாக ஏற்படும் அச்சுறுத்தல்கள்

## சுற்றுச்சூழல் செய்திகளின் வகைகள்



**செய்தி**



**விவரணம்**



**Blogs (வலைப்பதிவு)**



**செய்திக்கட்டுரை**



**அறிக்கைகள்**

சுற்றுச்சூழல் அறிக்கையிடலை பொறுத்தவரையில் மேற்குறிப்பிட்ட செய்தி வகைகள் யாவும் கீழ்வரும் கருப்பொருட்களில் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டவை மீதோ கவனம் செலுத்துபவையாக அமையலாம்:

1. சுற்றுச்சூழலின் சிதைவு மற்றும் அழிவு (காடழிப்பு, சுற்றுச்சூழல் பேரழிவுகள், வாழ்விட இழப்பு போன்றவை)

2. சுற்றுச்சூழல் பிரச்சினைகளும் தீர்வுகளும் (மாசுபாடு, நிலையான அபிவிருத்தி போன்றவை)

3. காலநிலை மாற்றம்

4. மனிதர்களுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையிலான மோதல்கள் (மனித-யானை மோதல், மனித - முதலை மோதல், மனித - சிறுத்தை மோதல் போன்றவை)

5. சூழலியல் சட்டம் (சட்டங்கள் / ஒழுங்குமுறைகள்)

6. புதிய கண்டுபிடிப்புகளும் புதுமைகளும்

7. உள்நாட்டு கொள்கைகள், தரநிலைகள், உள்நாட்டு சட்டங்கள், வர்த்தமானிகள், வடிவமைப்புப் பணி, செயற்திட்டங்கள், முதன்மைத் திட்டங்கள், சர்வதேச சாசனங்கள், செயன்முறைகள் மற்றும் உச்சிமாநாடுகள்

# சுற்றுச்சூழல் அறிக்கை பற்றிய வழிகாட்டுதல்கள்



இலங்கையில் சுற்றுச்சூழல் அறிக்கையிடலை நோக்கும்போது, தரப்படுத்தப்பட்ட அறிக்கையிடல் நடைமுறைகளுக்கு இடையிலான பிளவு மற்றும் செய்திகள் உண்மையில் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பது தெளிவாகிறது. இதன் மூலம், இலங்கையில் சுற்றுச்சூழல் அறிக்கையிடலை பாதிக்கும் அரசியல் சார்புக்கு மேலதிகமாக, ஊடகவியலாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் நிபுணர்கள்/செயற்பாட்டாளர்களுக்கு இடையிலான தொடர்பின்மை தெளிவாகிறது.

## கதையை தெரிவுசெய்தல்

உள்ளடக்கம், இலக்கு வைக்கும் குழு மற்றும் கதையை வெளியிடும் அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்து கதைகள் பல்வேறு வழிகளில் உருவாக்கப்படலாம். எனினும், எப்போது, எப்படி உருவாக்குவது என்பதை மனதிற்கொள்வது அவசியம். சுற்றுச்சூழல் அறிக்கையிடலை வெளியிடுவதற்கான குறைந்தளவான இடத்தை வழங்குவதால், கதை மக்களை சென்றடையும் அளவு மற்றும் தாக்கத்தை அதிகப்படுத்தும் வகையில், ஒரு கதையை சரியான நேரத்தில் பத்திரிகை ஆசிரியர் அல்லது தயாரிப்பாளரிடம் வழங்குவது மிகவும் முக்கியமானது. சில உதாரணங்கள் வருமாறு:

- சுற்றுச்சூழலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள விசேட தினங்கள் (உலக பூமி தினம், உலக சுற்றுச்சூழல் தினம், நீல வானத்திற்கான சர்வதேச தூய்மையான காற்று தினம், சர்வதேச குரங்கு தினம், போர் மற்றும் ஆயுத மோதலில் சுற்றுச்சூழலை சுரண்டுவதைத் தடுப்பதற்கான சர்வதேச தினம் போன்றவை)

- சுற்றுச்சூழல் தொடர்பான முக்கிய மாநாடுகள் இடம்பெறும் காலம் (ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்ற மாநாடு, ஐக்கிய நாடுகள் உயிர்ப்பல்வகைமை மாநாடு, ஐக்கிய நாடுகள் பெருங்கடல் மாநாடு போன்றவை)

- தற்போதைய உள்ளூர் அல்லது வானிலை நிகழ்வுகள் காரணமாக சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஒரு தலைப்பாக மாறும் சந்தர்ப்பங்கள் (கனமழை, வெள்ளம், சூறாவளி, காடழிப்பு, மனித-யானை மோதல், போன்றன)

- சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்காக நிகழ்ச்சிகள்/செய்தித்தாள்களில் வழமையான முறையில் நேரம் /இடத்தைப் பயன்படுத்துதல்

செய்திகளை அறிக்கையிடும்போது, குறித்த செய்திகள் தொடர்பான விடயங்களை தொலைபேசி ஊடாக சேகரிப்பதை விட, முடியுமான சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்கள், சம்பந்தப்பட்ட இடத்திற்குச் செல்வது அவசியமாகும். பிரச்சினை குறித்த உண்மையான பிம்பத்தை உருவாக்குவதற்கு இது உதவும். உதாரணமாக, அதிகாரிகள் ஏதாவது சட்டவிரோதமாக அல்லது தவறு செய்கிறார்களா அல்லது நிபுணர்கள் அவர்களின் கருத்துக்களுக்கு எதிராக உண்மைகளை வழங்குகிறார்களா என்பதை கண்டறிய இது உதவும். சம்பவங்கள் பற்றிய துல்லியமான அறிக்கையை வழங்குவதற்காக, ஊடகவியலாளர்கள் கள அறிக்கையிடலை வழங்குவதும், கதையின் அனைத்து பக்கங்களையும் உள்ளடக்குவதும் மிகவும் வரவேற்கத்தக்கது.

## சுற்றுச்சூழல் அறிக்கையிடலுக்கான அடிப்படை வழிகாட்டுதல்கள்

ஆர்வலர்கள் அல்லது நிபுணர்கள், பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பும் பார்வைகள்/கருத்துகளுக்கு மாறாக, பொதுநலன் எங்குள்ளது என்பதற்கு இடையே உள்ள இடைவெளியை பல ஊடகவியலாளர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பது, சூழலியல் ஊடகவியலாளர்கள் மற்றும் சூழலியல் நிபுணர்கள்/செயற்பாட்டாளர்கள் இடையே காணப்படும் மற்றுமொரு முக்கிய கரிசனையாகும்.

ஊடகவியலாளர்களின் கண்ணோட்டத்திலிருந்து

நோக்கினால், அவர்கள் ஒரு சம்பவத்தைப் பற்றி அறிக்கையிடவே விரும்புகின்றனர். எனினும், அவர்கள் பிரச்சினை தொடர்பான அரசியலில் சிக்கிக்கொள்கின்றனர் அல்லது ஆர்வலர்கள் மற்றும் நிபுணர்களுக்கு மத்தியிலான விவாதப் பொருளாக ஆகின்றனர். இலகுவான வழிகாட்டுதல்கள் சிலவற்றைப் பின்பற்றி, பொருத்தமான சூழ்நிலையில் அவற்றை இணைத்துக்கொள்வதன் மூலம் இப்பிரச்சினைகளை இலகுவாக தவிர்த்துக்கொள்ளலாம்.

1. **சரியான வினாக்களை கேளுங்கள்**

நிபுணர்களுடன் உரையாடுகையில், அறிக்கையிட வேண்டிய விடயத்திற்கும், கவனத்தை ஈர்க்கும் கதையாகக் கருதப்படுவதற்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கும் வகையில் ஊடகவியலாளர்கள் சரியான வினாக்களை தொடுப்பது அவசியமாகும். சரியான வினாக்களை தொடுக்காத பட்சத்தில், கதையின் உண்மையான தன்மை இழக்கப்படும். ஆகையால், ஊடகவியலாளர்கள் குறிப்பிடத்தக்க அளவு தம்மை தயார்ப்படுத்துவது அவசியமாகும்.

உதாரணமாக, இறந்துபோன திமிங்கிலம் ஒன்று கரையொதுங்கினால், திமிங்கிலம் கரையொதுங்கியதற்கு அப்பால் அந்த செய்தியை வடிவமைப்பது அவசியம். அதாவது, எவ்வளவு கால இடைவெளியில் இவ்வாறான சம்பவம் இடம்பெறுகின்றது மற்றும் கண்கூடாக பார்க்கும் விடயத்திற்கு அப்பால் எதேனும் காரணங்கள் உள்ளனவா என்பதை கட்டுரையில் அவதானிக்க வேண்டும்.

2. **ஆழமான ஆய்வு**

சுற்றுச்சூழல் ஊடகவியலில் வரலாறும் முக்கிய இடத்தினை வகிக்கின்றது. நிகழ்காலத்தைப் புரிந்துகொள்வதற்கு, நிகழ்காலத்திற்கு வழிவகுத்த கடந்த கால சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வது அவசியம்.

இலங்கையில் நீடிக்கும் மனித-யானை மோதல் இதற்கு சிறந்த உதாரணமாகும். மக்கள் குடியிருப்புகளுக்கு யானைகள் வருவது பற்றிய செய்திகள் அண்மைய காலமாக ஏன் அடிக்கடி வெளிவருகின்றன? மனித-யானை மோதலால் ஏற்படும் சேதங்களை எவ்வாறு கணக்கிடுவது?

இந்த வினாக்களுக்கான பதில்களை புரிந்துகொள்வதற்கு, காட்டு யானைகளின் வாழ்விடங்களை மனிதர்கள் ஆக்கிரமித்தமை, அதனால் யானைகளின் வாழ்விடமும் உணவு தேடும் இடமும் குறைவடைந்தமை பற்றிய வரலாற்றினை நோக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு விடயத்திற்காக அரசு முன்னெடுக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆய்வு செய்ய வேண்டும். அத்தோடு, குறித்த திட்டங்கள் வனவிலங்குகள் மற்றும் அவற்றின் வாழ்விடங்களில் செலுத்தும் தாக்கம் பற்றி நிபுணர்களிடம் கேட்டறியவேண்டும். நிலையான தீர்வுகளைப் பெறுவதற்கு அடிப்படைக் காரணங்களைக் கண்டறிவது அவசியமாகும். இதற்கு தொழில்நுட்ப ரீதியாக பயன்படுத்தப்படும் சொல்லாக “Root Cause Analysis (RCA)” காணப்படுகின்றது.

3. **நிபுணர்களின் கருத்து**

சுற்றுச்சூழல் தொடர்பான கட்டுரை அல்லது சுற்றுச்சூழல் குறித்த ஒரு சம்பவத்தை எழுதும் போது, அத்துறைசார் வல்லுநர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வது அவசியமாகும். அவ்வாறு பெறப்படும் கருத்தினை பொதுமக்கள் இலகுவாக விளங்கிக்கொள்ளும் வகையில் அறிக்கையிடுவது ஊடகவியலாளரின் பொறுப்பாகும். நிபுணர்களின் கருத்தின் அடிப்படையில் தமது சொந்தக் கருத்துக்களை அல்லது தீர்மானங்களை தமது அறிக்கையிடலில் முன்வைக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கவேண்டும்.

சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினையின் ஒவ்வொரு அம்சத்தின் நுணுக்கங்களையும் ஊடகவியலாளர்கள் அறிந்திருக்க மாட்டார்கள். அவ்வாறு அறிந்திருந்தாலும்கூட, தெரிவிக்கப்படும் விடயங்களை நிறுவும் வகையிலான நிபுணர் ஒருவரின் கருத்தினை பெற்றுக்கொள்வது அவசியம்.

நிபுணர் என அழைக்கப்படுவதால் அவர் சுற்றுச்சூழலுடன் தொடர்புடைய ஒவ்வொரு துறையிலும் நிபுணராக இருக்கவேண்டிய அவசியமில்லை என்பதையும் ஊடகவியலாளர் கருத்திற்கொள்ள வேண்டும். கருத்துத் தெரிவிக்கும் நிபுணர் அந்தத் துறையில் நிபுணராக இருப்பதை உறுதிசெய்வது ஊடகவியலாளர்களுக்கு சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரின் நலன்சார்ந்தாகும். உதாரணமாக, கண்டல் தாவர பாதுகாப்பு

தொடர்பான கதையை அறிக்கையிடும்போது, கண்டல்தாவரம் பற்றி நிபுணத்துவம் பெற்ற நிபுணரின் கருத்தினை பெற்றுக்கொள்ள வேண்டும். கண்டல் தாவரங்கள் பற்றிய கதைக்கு, திமிங்கிலங்கள் பற்றிய ஒரு நிபுணரிடம் இருந்து கருத்தைப் பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றது மற்றும் பயனற்றது.

தீர்வினை பெற்றுக்கொள்வதே சுற்றுச்சூழலைப் பற்றிய அறிக்கையிடலின் முக்கிய நோக்கமாக இருப்பதால், இதுவும் முக்கியமானது. கதையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினையை முன்னிலைப்படுத்தி, தீர்வினையும் பரிந்துரைக்க வேண்டும். எதிர்கொள்ளும் சவால்களுக்கான நிபுணத்துவமும் நடைமுறைக்கேற்ற தீர்வுகளும் நிபுணர்களிடம் மாத்திரமன்றி, பழங்குடி/பாரம்பரிய சமூகங்களுக்குள்ளும் இருக்கலாம் எனும் புரிதல் அண்மையில் ஏற்பட்டுள்ளது. அத்தோடு, குறிப்பிட்ட சமூகத்திற்குள் அது அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. மொழி

சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் என எந்த மொழி பயன்படுத்தப்பட்டாலும், கதையில் பயன்படுத்தப்படும் மொழிநடை மிக முக்கியமானது. கதையை எவ்வாறு கட்டியெழுப்ப வேண்டும் என்பதை ஊடகவியலாளர் புரிந்துகொண்டு, அதனை தெளிவான நடையில் முன்வைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். உங்கள் கதையின் முதல் விமர்சன வாசகர் நீங்கள்தான். உங்களுக்கு புரியாவிட்டால் அதுபற்றி எழுதாதீர்கள்.

எழுதப்படும் கதை, தனிப்பட்ட ரீதியான கருத்தை தெரிவிப்பதாக அமைந்தால், அது மேலும் தீங்கு விளைவிக்கும். ஆகவேதான் மொழியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது. குழப்பத்தை தவிர்ப்பதற்கு, ஊடகவியலாளர் ஒருவர் உண்மையையும் கருத்தினையும் வேறுபடுத்திப் பார்ப்பதும் அவசியம்.

## 5. விஞ்ஞானத்தின் முக்கியத்துவம்

சூழலியல் ஊடகவியல் என்ற வருகையில், விஞ்ஞானம் சார்ந்த வாசகங்களிலும் சொற்பதங்களிலும் சில ஊடகவியலாளர்கள் குழம்பிவிடுகின்றனர். அதே சந்தர்ப்பத்தில் சில சமயங்களில் அவற்றிலிருந்து முழுமையாக விலகவும் முயற்சிக்கின்றனர். விஞ்ஞானத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்தவும் முடியாது. காரணம், அது கதைக்கு பெறுமதியையும் முக்கியத்துவத்தையும் சேர்க்கின்றது.

முறையாக ஆய்வுசெய்யப்பட்டு விபரங்களை முன்வைக்கும் போதுதான் ஒரு கதை முழுமைபெறும். நிபுணர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வது கதையின் ஒரு பகுதி மாத்திரமே. சுற்றுச்சூழல் பிரச்சினையின் பின்னணியில் உள்ள விஞ்ஞானம் சார் செயன்முறை பற்றி, மக்கள் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கிக் கூற வேண்டும்.

விஞ்ஞானத்தை இலகுவான நடையில் தெரிவிப்பது முக்கியமாகும். காரணம், அறிக்கையிடப்பட்ட கதையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கு, இயற்கை உலகின் செயன்முறையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## 6. சட்டபூர்வ அம்சத்தின் முக்கியத்துவம்

விஞ்ஞானத்தை போன்றே, சுற்றுச்சூழல் பிரச்சினைகளின் சட்டரீதியான விடயங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை. கொள்கைகள்/ சட்டங்களை உருவாக்கும்போது, பொதுக் கருத்துக்களுக்கு இடமளிப்பது முக்கியமானது. காரணம், ஆக்கத்தை வெளிக்கொணரும் சந்தர்ப்பத்தில், சம்பந்தப்பட்ட தலைப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஊடகவியலாளர்களுக்கு இதுவொரு முக்கியமான சாளரத்தை வழங்குகின்றது.

உதாரணமாக, பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை அறிக்கையிடும்போது சட்டங்களும் வர்த்தமானிகளும் விசேட முக்கியத்துவம் வாய்ந்தவை. அத்தோடு, உள்நாட்டு தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைப் பற்றி அறிக்கையிடுகையில், அவற்றின் மீது தாக்கம் செலுத்தும் பாதுகாப்பு சட்டம் இன்றியமையாதது. சுற்றுச்சூழல் பிரச்சினையின் சட்ட அம்சம் பற்றிய விழிப்புணர்வு ஒரு ஊடகவியலாளருக்கு தெரிந்திருக்கும்போது அது, தீர்வு அல்லது தணிப்பின் ஒரு பகுதியாக சட்ட நடவடிக்கை

அவசியமாகவுள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகளை அறிக்கையிட அனுமதிக்கின்றது.

## 7. அரசியல் அம்சத்தின் முக்கியத்துவம்

இலங்கையை பொறுத்தவரை சுற்றுச்சூழல் அறிக்கையிடலின்போது, அது எந்தளவிற்கு அரசியலாக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்க மற்றுமொரு சவாலாகும். இதன் காரணமாக, குறிப்பிட்ட அறிக்கையிடல் அல்லது ஆய்வு தொடர்பாக காணப்படும் அரசியல் அம்சம் தொடர்பாக சூழலியல் ஊடகவியலாளர்கள் உன்னிப்பாக அவதானிப்பதோடு, அறிக்கையிடலில் எப்போதும் பாரபட்சமற்ற தன்மையை வெளிப்படுத்த வேண்டும் என்பதை கருத்திற்கொள்ள வேண்டும்.

## 8. அளவியல் தரவு மற்றும் புள்ளிவிபரங்களின் முக்கியத்துவம்

சுற்றுச்சூழல் அறிக்கையிடலுக்கு அதிக பெறுமதியை சேர்க்கும் வழிகளாக, அளவியல் தரவும் புள்ளிவிபரங்களும் காணப்படுகின்றன:

- அறிக்கையிடலில் தெரிவிக்கப்பட்ட தகவல்களின் காட்சிப்படுத்தலை விளக்கப்படங்கள் மற்றும் வரைபடங்கள் மூலம் வழங்குதல்.
- கலந்துரையாடப்பட்ட பிரச்சினைகளுக்கான செல்லுபடியாகும் தன்மை மற்றும் சரிபார்ப்பினை வழங்குதல்.
- மேலதிக பகுப்பாய்வினை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல்.
- போக்குகளையும் அபிவிருத்திகளையும் மிகவும் இலகுவாக அடையாளம் காண்பதற்கு வாய்ப்பினை வழங்குதல்.

## சுற்றுச்சூழல் அறிக்கையிடலுக்கான படிப்படியான வழிகாட்டி

கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் சூழலியல் ஊடகவியலாளர்கள் தற்போது குறைவாகவே உள்ள நிலையில், சுற்றுச்சூழல் பிரச்சினைகள், பாதுகாப்பு மற்றும் நிலைபேற்றுத்தன்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கான முதன்மையான வழியாக சுற்றுச்சூழல் ஊடகவியல் மாறியுள்ளது.

சுற்றுச்சூழலை பற்றிய ஒரு கட்டுரையை சரியாகவும் துல்லியமாகவும் எழுதும்போது, அது விழிப்புணர்வை ஏற்படுத்தும், கருத்துக்கள் பொதிந்ததாக காணப்படும் மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

கதையை தெரிவுசெய்த பின்னர் அதனை சிறப்பாக எழுதுவதற்கான செயன்முறையை கீழ்காணும் படிமுறைகள் விபரிக்கின்றன. ஒரு கதையை தெரிவுசெய்த பின்னர் அனைத்து விடயங்களும் பூர்த்திசெய்யப்படுவதை ஒரு விரிவான மதிப்பாய்வு எவ்வாறு உறுதிசெய்கின்றது என்பதைக் காட்டுகின்றது.



### படிமுறை ஒன்று:
## நீங்கள் ஆய்வினை மேற்கொள்ளுங்கள்

சுற்றுச்சூழல் குறித்த விடயமொன்றை ஆய்வுசெய்யும் போது, அதுபற்றி மேலும் அறிந்துகொள்வதற்கு இணையத்தில் காணப்படும் புத்தகங்கள் மற்றும் மூலங்களை தேடிப்படிப்பது ஆரம்பப் புள்ளியாக அமையும்.

எந்த வினாக்களை தொடுக்க வேண்டும் என்பதை அறிந்துகொள்ளும் அளவிற்கு அறிவினை வளர்த்துக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு தலைப்பிற்கும் பல்வேறு மூலங்களும் கோணங்களும் இருப்பதோடு, அவற்றிலிருந்து தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். கட்டுரையில் காணப்படும் தலைப்பிற்கிணங்க இது மாறுபடும் என்றாலும், பிரபலமான சில மூலங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- அரச நிறுவனங்கள்
- சூழலியலாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர் குழுக்கள்
- சில துறைகள் மற்றும் விடயதானங்களைச் சார்ந்த கல்வியாளர்கள் / நிபுணர்கள். (கடல்சார் உயிரியல், சுற்றுச்சூழல் சட்டம், பறவையியல், சூழலியல், வளி மாசுபாடு போன்றன)
- இலக்கிய தொகுப்புகள் (நூலகங்கள் போன்றன)
- விஞ்ஞான ஆய்வறிக்கைகள்
- பிரபலமான சிவில் சமூக அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. அமைப்புகள் மற்றும் ஏனைய மூலங்களில் இருந்து கிடைக்கும் கொள்கை விளக்கங்கள் மற்றும் திட்ட அறிக்கைகள்.

### படிமுறை இரண்டு:
## வினாக்கொத்தினை உருவாக்கவும்

சரியாக செய்தால், ஒரு நல்ல ஆராய்ச்சியானது பதில்கள் தேவைப்படும் வினாக்களை உருவாக்கும். கதையின் கோணத்தை சில கேள்விகள் வழங்கும் என்பதால், அனைத்தையும் பட்டியலிடவும்.

வாசகனின் மனதில் எழும் கேள்விகளுக்கான பதில்களை வழங்கும் வகையில், ஒரு விரிவான எழுத்தாக்கம் காணப்பட வேண்டும். உங்கள் வினாக்கொத்தினை எடுத்து, நிபுணர்களின் கருத்து தேவைப்படும் பகுதிகளை அடையாளப்படுத்தவும்.

### படிமுறை மூன்று:
## நிபுணர்களுடன் உரையாடவும்

நிபுணர்களின் கருத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. கதையுடன் தொடர்புடைய நிபுணர்களை கண்டறிந்து அவர்களிடம் பேசுங்கள். அவர்கள் வழங்கும் பதில்கள் தொடர்பில் விசேட கவனஞ்செலுத்த வேண்டும்.

கதைக்கு மிகவும் பொருத்தமான ஒரு நிபுணரை கண்டறிவது, ஒரு சிறந்த கட்டுரைக்கான முக்கியமான விடயமாகும். குறித்த நிபுணர்களின் பிரசுரங்களை வாசிப்பதன் மூலம் அவர்கள் எவ்விடயத்தில் நிபுணத்துவம் பெற்றுள்ளனர் என்பது குறித்து அறிந்துகொள்ள முடியும். இதற்கு முன்னர் இடம்பெற்ற நிபுணர்களின் நேர்காணல்கள் மற்றும் அவர்களது உத்தியோகபூர்வ வலைத்தளங்களும், உங்களது கதைக்கான அவர்களது பொருத்தப்பாட்டினை தெளிவுபடுத்த உதவும்.

நிபுணர்களின் கருத்திற்கேற்ப கதை அடியோடு மாறுபடலாம். கதையில் சமநிலையைப் பேணுவதற்கு ஒன்றிற்கு மேற்பட்டோரிடம் உரையாடுங்கள். ஆனால், நிபுணர்களுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள். கதையிலிருந்து விலகிச்செல்லும் ஒரு சூசகமான நிகழ்ச்சிநிரலை சில நிபுணர்கள் கொண்டிருக்கலாம். ஒரு ஊடகவியலாளர் என்ற ரீதியில், மற்றவரின் நிகழ்ச்சிநிரலை தெரிவிப்பது உங்களது பணியல்ல.

### படிமுறை நான்கு:
## முதலாவது வரைவை தொகுக்கவும்

முதலாவது வரைவானது, முக்கிய வினாக்களுக்கான அனைத்து பதில்களையும் தொகுத்து, வசனங்களைப் பிரித்து, நிபுணர்களின் கருத்துடன் முக்கிய தகவல்கள் அல்லது வாதங்களைக் கொண்டமைந்த பிரதியாகக் காணப்படும். பதிப்பகத்தால் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை மற்றும் ஏனைய வழிகாட்டுதல்களுக்கு அமைவாக இது அமையாது.

எழுத்தாளரின் எண்ணங்களை ஒரு ஒத்திசைவான கதையாக ஒழுங்கமைப்பதற்கு இந்த முதலாவது வரைவு உதவியாக அமையும். கதையின் இரண்டாவது அல்லது அதற்கு பின்னராக பிரதியை உருவாக்கும்போது மேலும் விடயங்களைச் சேர்க்கலாம் அல்லது நீக்கலாம்.

### படிமுறை ஐந்து:
## தகவல்களை இருதடவைகள் சரிபார்க்கவும்

பிரதியை வாசித்து, உண்மைகள் மற்றும் அவற்றின் மூலங்களை இரண்டு தடவைகள் சரிபார்த்து, அவசியம் ஏற்பட்டால் அவற்றின் மேற்கோள்களை சரிபார்க்கவும். மேற்கோள்கள், சுருக்கெழுத்துக்கள், அறிவியல் சொற்கள், முக்கிய எண்கள் மற்றும் கட்டுரையின் நம்பகத்தன்மையை அதிகரிக்கும் சகல விடயங்களையும் இரண்டு தடவைகள் சரிபார்க்கவும்.

### படிமுறை ஆறு:
## திருத்தியமைக்கவும்

ஒரு ஊடகவியலாளர் தனது எழுத்துக்களை விமர்சனத்திற்கு உள்ளாக்கவேண்டும். வாசகர்களின் கண்ணோட்டத்தில் இருந்து கதையை வாசித்து / கற்பனை செய்து அதனை நன்கு திருத்தியமைக்கவும்.

### படிமுறை ஏழு:
## பின்தொடருங்கள்

ஒரு தடவை அறிக்கையிடலுடனேயே முடிவடையும் சுற்றுச்சூழல் தொடர்பான கதைகள் மிகவும் அரிதானவை. கதையைப் பின்தொடர்வதும், ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதும், முன்னேற்றங்கள் குறித்து அறிக்கையிடுதலும், அதற்கான தீர்வு உருவாக்கப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதும் ஊடகவியலாளரின் பொறுப்பாகும். நிபுணர்களுடனும் ஆர்வலர்களுடனும் தொடர்பினை பேணுங்கள் மற்றும் பின்தொடருங்கள். அவர்களுடனான உரையாடல்களின் மூலம் மேலதிக கதைகளுக்கான வழிகாட்டுதல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

# கவனிக்கவேண்டிய விடயங்கள்



ஏனைய வகையிலான ஊடகவியலைப் போன்றே, சுற்றுச்சூழல் ஊடகவியலும் சிக்கலானதாக இருக்கலாம். அறிக்கையிடலை தயார்செய்கையில் சில விடயங்களில் கவனஞ்செலுத்த வேண்டும்.

### 1. தவறான கலைச்சொற்கள்

தவறான கலைச்சொற்களை பயன்படுத்துவதானது, வாசகர்களை தவறாக வழிநடத்தக்கூடும். மிகவும் பொருத்தமான சொல்லை உங்களால் கண்டுபிடிக்க முடியாவிட்டால் நிபுணர் ஒருவரின் உதவியை பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே உள்ள பிரச்சினைகளை விளக்குவதற்கு, புதிய சொற்களை உருவாக்க வேண்டாம்.

### 2. தகுதியற்ற நிபுணர்கள்/ சரிபார்க்கப்படாத மூலங்கள்

பல்துறை நிபுணத்துவம் பெற்ற சிலர் இருந்தாலும், பெரும்பாலானவர்கள் சுற்றுச்சூழலுடன் தொடர்புடைய ஒரு துறையில் மாத்திரம் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆவர். அவர்கள் வழமையாக ஒரு குறுகிய, ஒரு விசேட பிரிவில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆவர். அவ்வாறான சந்தர்ப்பத்தில், குறித்த பிரிவிற்கு அப்பாற்பட்ட விடயதானங்களுக்கு அவர்களை நிபுணர்களாக மேற்கோள் காட்டக்கூடாது. இதேபோன்று, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பான பல மூலங்கள் இணையத்தில் உள்ளன. உங்கள் அறிக்கையிடலுக்கு நம்பகத்தன்மையை வழங்குவதற்காக தனிநபர்களை மேற்கோள் காட்டுவதையோ அல்லது சரிபார்க்கப்படாத மூலங்களை மேற்கோள் காட்டுவதையோ தவிர்க்கவும். ஒரு நிபுணரால் அல்லது மேற்கோள் மூலம் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், நம்பத்தகுந்த மூலங்களில் இருந்து பெறப்பட்ட துல்லியமான மற்றும் சரிபார்க்கப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டவை என்பதை உறுதிப்படுத்தவும்.

### 3. நிகழ்ச்சிநிரல் அடிப்படையிலான கருத்துக்கள்

நிபுணர் ஒருவர் தனது கருத்தை உண்மையான விடயமாக குறிப்பிடுதல் அல்லது ஒரு அடிப்படை நிகழ்ச்சி நிரலுடன் மூலமொன்று அதன் கருத்தினை தெரிவித்தல் ஆகிய அனுபவங்களை ஊடகவியலாளர்கள் பெற்றிருக்கலாம். விடயங்களை மக்களுக்கு தெரிவிப்பது ஊடகவியலாளர்களின் கடமையே தவிர, ஏனையோரின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப செயற்படுவதல்ல என்பதை கவனத்திற்கொண்டு இவ்விடயங்கள் குறித்து அவதானமாக செயற்படவும்.

## முக்கிய சொற்கள்

சூழலியல் பிரச்சினைகள் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான அறிக்கையிடலின்போது பயன்படுத்தும் சில முக்கியமான சொற்கள் கீழ்காணும் பட்டியலில் வழங்கப்பட்டுள்ளன. இந்த சொற்களுக்கான விளக்கத்தை அறிந்துகொள்வதானது, சில பிரச்சினைகளை புரிந்துகொள்வதற்கும், சூழலியல் நிபுணர்களால் அடிக்கடி பயன்படுத்தப்படும் கருத்துக்களை விளங்கிக்கொள்வதற்கும் உதவும்.

| சொற்பதம் | சுருக்கக் குறியீடு | பொருள் விளக்கம் |
|---|---|---|
| காலநிலை மேம்பாட்டிற்கான நடவடிக்கை | ACE | கல்வி, பயிற்சி, விழிப்புணர்வை உருவாக்கல், தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதி, பொதுமக்கள் பங்கேற்பு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு மூலம் காலநிலை நடவடிக்கைகளில் ஈடுபட வெவ்வேறு பங்குதாரர்களுக்கு (சிவில் சமூகம் மற்றும் இளைஞர்கள் உட்பட) அதிகாரமளித்தல். |
| தழுவல் முகாமைத்துவம் | AM | இயற்கை சுற்றுச்சூழல் முறைகள் போன்ற ஊகிக்க முடியாத முறைகளுக்குள் உள்ள உள்ளார்ந்த அபாயங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளை நிவர்த்தி செய்வதற்கு, ஒரு திறமையான மற்றும் பயனுள்ள கற்றல் செயன்முறையைப் பயன்படுத்துவதன் மூலம், சுற்றுச்சூழல் முகாமைத்துவத்திற்கான ஒரு விரிவான விஞ்ஞான அணுகுமுறை. |
| உயிர்ப்பல்வகைமை (உயிரியல் பன்முகத் தன்மை என்றும் அழைக்கப்படுகிறது) | - | மழைக்காடு போன்ற ஒரு குறிப்பிட்ட வாழ்விடத்தில் வாழும் உயிரினங்கள், துணை உயிரினங்கள் அல்லது சமூகத்தின் பரவெல்லை. |
| உயிர்மண்டலம் (சூழல் மண்டலம் என்றும் அழைக்கப்படுகிறது) | - | கற்கோளம் (புவியின் அகணி முதல் புவி மேற்பரப்பு வரை), நீர்க்கோளம் (பூமியிலுள்ள நீர்ப்பரப்புகள் யாவும்) மற்றும் வளிமண்டலத்தின் பகுதிகள் அடங்கலாக பூமி மற்றும் அதன் வளிமண்டலத்தில் உயிரினங்கள் உயிர்வாழும் பகுதி. |
| மக்கள் தொகை கணக்கெடுப்பு | - | குறிப்பிட்ட மக்கள் தொகையின் எண்ணிக்கை மற்றும் பிற அம்சங்களை மதிப்பிடுவதற்கு, எடுக்கப்படும் தரவு சேகரிப்பு |
| காலநிலை மற்றும் அனர்த்த ஆபத்து நிதி மற்றும் காப்புறுதி | CDRFI | பேரழிவுகள் மற்றும் எதிர்பாராத அதிர்ச்சிகளுக்கு முகங்கொடுக்க, முன் ஏற்பாடு செய்யப்பட்ட நிதிக்கருவிகள் மற்றும் வழிமுறைகள். இது நிதி நிலைத்தன்மையை மேம்படுத்துகிறது மற்றும்/அல்லது நிதி ஆதாரங்களை வழங்குகிறது. |

| | | |
|---|---|---|
| காலநிலை மாற்றங்கள் | - | வெப்பநிலை மற்றும் வானிலை ஒழுங்குகளில் நிகழும் நீண்ட கால அளவிலான மாற்றங்கள். அவை முக்கியமாக மனித நடவடிக்கைகள் மற்றும் பச்சைவீட்டு வாயு வெளியேற்றம் மற்றும் புதைபடிவ எரிபொருட்களை எரிப்பதால் ஏற்படும் ஒட்டுமொத்த உலக வெப்பநிலை உயர்வு போன்ற காரணிகளால் ஏற்படுகின்றன.<br><br>சக்தி (வலு), கைத்தொழில், போக்குவரத்து, கட்டிடங்கள், விவசாயம் மற்றும் நில பயன்பாடு ஆகியவை இந்த செயன்முறைக்கு பங்களிக்கும் முக்கிய துறைகளாகும். |
| காலநிலை மாற்ற தழுவல் | CCA | உண்மையான அல்லது எதிர்பார்க்கப்படும் காலநிலை மாற்றங்களின் விளைவுகளுக்கு முகங்கொடுக்க எதிர்மறையான தாக்கங்களைக் குறைப்பதற்கு அல்லது நேர்மறை வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு இயற்கை அல்லது மனித முறைகளுக்கு ஏற்ப அனுசரித்துக் கொள்ளுதல். |
| காலநிலை மாற்ற தணிப்பு | - | பச்சைவீட்டு வாயு கழிவுகளின் வெளியேற்றத்தைக் குறைக்க அல்லது வளிமண்டலத்தில் இருந்து பச்சைவீட்டு வாயுக்களை வெளியேற்றும் மாற்று நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான மனித தலையீடு. |
| காலநிலை இடர்பாடு | - | ஆபத்துக்கு (வெள்ளம், வறட்சி அல்லது புயல் போன்றவை) இடையேயான தொடர்புகள் மற்றும் வெளிப்பாடுகள் (மக்கள், சொத்துக்கள் அல்லது உட்கட்டமைப்பு சேதமடைதல்) மற்றும் அதீத பாதிப்பு போன்ற இடர்களை காலநிலை இடர் முகாமைத்துவத்தின் மூலம் எதிர்கொள்ள முடியும். |
| காலநிலை இடர் முகாமைத்துவம் | CRM | இடர் விழிப்புணர்வு மற்றும் இடர் மதிப்பாய்வுகள், இடர் தடுப்பு, இடர் குறைப்பு, இடர் பரிமாற்றம் மற்றும் இடர் தக்கவைப்பு உட்பட பல்வேறு விடயங்களின் உள்ளடக்கத்தை குறிக்கிறது. |
| சமூகம் | - | ஒரு பகுதியில் வெவ்வேறுபட்ட உயிர் தொழிற்பாடுகளை செய்யும் குழு. |

| | | |
|---|---|---|
| பங்குதாரர்களின் மாநாடு | COP | தற்போது காலநிலை மாற்றத்தைத் தணித்தல், தழுவல் மற்றும் காலநிலை நடவடிக்கையின் ஏனைய அம்சங்களில் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்ய UNFCCCஇன் உச்ச அமைப்பு ஆண்டுக்கு ஒருமுறை கூடுகிறது.<br><br>COPஇன் வருடாந்த கூட்டங்கள் பெரும்பாலும் COP என்றே குறிப்பிடப்படுகின்றன. |
| பேண்தகு நிலை (Conservation) | - | விரும்பத்தகாத மாற்றத்திலிருந்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் செயன்முறை. சுற்றுச்சூழல் அறிவு மற்றும் கொள்கைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தரத்தை பராமரித்தல். |
| அடர்த்தி | - | ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள தனிநபர்களின் எண்ணிக்கை (உயிரினங்கள், துணை உயிரினங்கள்). |
| சுற்றுச்சூழல் அமைப்பு | - | பல்வேறுபட்ட தாவரங்கள். விலங்குகள், நுண்ணுயிர் சமூகங்கள் மற்றும் அவை வாழும் சூழலுடனான அவற்றின் தொடர்புகள். |
| சுற்றுச்சூழல் | - | உயிரியல் உலகம் மற்றும் ஏனைய உயிரினங்கள் உட்பட அனைத்துவித உயிரினங்களும் வாழும் சூழல். |
| பூமி வெப்பமடைதல் | - | மனித நடவடிக்கைகள் காரணமாக பூமியின் மேற்பரப்பு நீண்ட காலமாக வெப்பம் அடைகிறது. கைத்தொழிற்புரட்சிக்கு முந்தைய காலத்திலிருந்து (1850 மற்றும் 1900க்கு இடையில்) அவதானிக்கப்படுகிறது.<br><br>இது முதன்மையாக படிம எரிபொருட்களை எரிப்பதால் ஏற்படுகிறது. இது பூமியின் வளிமண்டலத்தில் வெப்பத்தை தக்கவைக்கும் பச்சைவீட்டு வாயுக்களை அதிகரிக்கிறது மற்றும் நீண்டகால காலநிலை மாற்றங்கள் மற்றும் வேறு பல மாற்றங்களுக்கும் வழிவகுக்கிறது. |

| | | |
|---|---|---|
| பச்சைவீட்டு வாயு வெளியேற்றம் | GHGs | வளிமண்டல வாயுக்கள் புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கு காரணமாகின்றன. முக்கியமாக GHGகள் கார்பனீரொட்சைட்டு (CO2), மெதேன் (CH4), மற்றும் நைத்தரஸ் ஒட்சைட்டு (N20) அத்துடன் குறைவாகவே உள்ள GHGகள் ஹைட்ரோ/ ப்ளூரோகார்பன்கள் (HFCக்கள்), பெர்புளோரோகார்பன்கள் (PFCகள்) மற்றும் சல்பர் ஹெக்ஸாபுளோரைடு (SF6) ஆகியவையும் அடங்கும். |
| காலநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கிடையேயான குழு | IPCC | உலகில் காலநிலை மாற்றம் குறித்த முதன்மையான விஞ்ஞான அமைப்பு, உலகளாவிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சியின் நிலைக்கான கருப்பொருள் பகுதியை ஆய்வு செய்கிறது. அத்துடன் நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டு மற்றும் மதிப்பாய்வு செய்யப்படும் வழக்கமான மதிப்பீட்டு அறிக்கைகளையும் வெளியிடுகிறது. |
| கியோட்டோ நெறிமுறை | - | UNFCCCஇன் கீழ் காணப்படும் இரண்டு சர்வதேச ஒப்பந்தங்களில் கியோட்டோ நெறிமுறையும் ஒன்றாகும். கியோட்டோ நெறிமுறை, ஏனைய விடயங்களுடன், தொழில்மயமான நாடுகளால் பச்சைவீட்டு வாயு கழிவைக் குறைப்பதற்கான பிணைப்பு இலக்குகளை அமைக்கிறது. |
| நிகர பூஜ்ஜியம் | - | மனிதனால் தூண்டப்பட்ட GHG கழிவுகளை மனிதனால் உருவாக்கப்பட்ட பச்சைவீட்டு வாயு கழிவுகளுடன் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் சமநிலைப்படுத்துதல். இயற்கையான கட்டுப்படுத்தல் முறைகள் அல்லது தற்போது அளவில் கிடைக்காத தொழில்நுட்ப கார்பன் அகற்றுதல் நடவடிக்கைகள் மூலம் சமநிலைப்படுத்துதல். |
| பாரிஸ் ஒப்பந்தம் | PA | UNFCCCஇன் கீழ் காணப்படும் இரண்டு சர்வதேச ஒப்பந்தங்களில் ஒன்று.<br><br>பாரிஸ் உடன்படிக்கையின் மைய இலக்கு, புவி வெப்பமடைதலை கைத்தொழிற்புரட்சிக்கு முந்தைய காலத்தை விட 2 பாகை செல்சியஸுக்குக் குறைவாகவும், அதனை விட 1.5 பாகை செல்சியஸாக கட்டுப்படுத்துவது மிகவும் விரும்பத்தக்கது. |

| | | |
|---|---|---|
| தாவர பாதுகாப்பு | - | உயிரியல் கட்டுப்பாடு, விவசாய நடைமுறைகள் மற்றும் குறிப்பாக பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவது போன்றவை தாவரங்களை நோயிலிருந்து பாதுகாக்கும் செயற்பாடாகும். |
| மக்கள் தொகை | - | ஒரு குறிப்பிட்ட பகுதியில் வாழும் மற்றும் இனப்பெருக்கம் செய்யும் ஒரே இனத்தைச் சேர்ந்த பல தனிநபர்கள். |
| பேணிப் பாதுகாத்தல் | - | சுற்றுச்சூழல் மற்றும் அதன் கூறுகளை தேவையற்ற சேதம் அல்லது சிதைவிலிருந்து பாதுகாக்கும் செயன்முறை. |
| பாதுகாத்தல் | - | அழிந்துபோகும் அபாயத்தில் இருப்பதாக சட்டப்பூர்வமாக அடையாளம் காணப்பட்ட ஒரு இனத்தை அல்லது உயிரியல் பன்முகத்தன்மை மற்றும் இயற்கை வளங்களை பராமரிப்பதற்கு சிறப்பு மதிப்புள்ள கடல் அல்லது நிலப்பகுதி போன்றவற்றை பாதுகாக்கும் செயன்முறை. |
| மீளுருவாக்கம் | - | அழிக்கப்பட்ட அல்லது எரிக்கப்பட்ட நிலத்தில் மீண்டும் வளரும் தாவரங்களின் செயன்முறை. |
| உயிரினம் | - | இனப்பெருக்கம் செய்யக்கூடிய உயிரினங்களின் குழு. ஒரு உயிரினம் என்பது பேரினத்தின் ஒரு பிரிவாகும். |
| காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாடு | UNFCCC | ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் நிறுவப்பட்ட ஒரு சர்வதேச ஒப்பந்தம். இது 1992இல் சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாடு (UNCED) (“ரியோ பூமி உச்சி மாநாடு”) மற்றும் காலநிலை அமைப்பில் “ஆபத்தான” மனித தலையீட்டைத் தடுக்க மார்ச் 21, 1994இல் நடைமுறைக்கு வந்தது. |
| நிலைபேறான அபிவிருத்தி | | எதிர்கால சந்ததியினர் தங்கள் சொந்த தேவைகளை பூர்த்தி செய்யும் திறனை சமரசம் செய்யாமல் தற்போதைய தேவைகளை பூர்த்தி செய்யும் அபிவிருத்தி. |

## மேற்கோள்கள்


Kille, L. W. (2009). ***Committee of Concerned Journalists: The principles of journalism.*** The Journalist's Resource. Retrieved May 8, 2023, from https://journalistsresource.org/home/principles-of-journalism/

Northern Michigan University Writing Center. (n.d.). ***Introduction to Journalism | NMU Writing Center.*** Northern Michigan University. Retrieved April 8, 2023, from https://nmu.edu/writingcenter/journalism-introduction

Poulson, D. (2018, October 18). ***Challenges of covering the environment - Knight Center for Environmental Journalism.*** Knight Center for Environmental Journalism. Retrieved May 8, 2023, from https://knightcenter.jrn.msu.edu/2018/10/18/challenges-of-covering-the-environment/

Shalika, B. (2016). Analysis on Environmental Journalism and the Challenges of Journalists in Sri Lanka. ***Analysis on Environmental Journalism and the Challenges of Journalists in Sri Lanka,*** 9(2), 88-92. https://www.indianjournals.com/ijor.aspx?target=ijor:jgc&volume=9&issue=2&article=004

United Nations Environment Programme. (n.d.). ***Publications & data.*** UNEP. Retrieved May 14, 2023, from https://www.unep.org/publications-data

United Nations Framework Convention on Climate Change. (n.d.). ***Resources.*** UNFCCC. Retrieved May 14, 2023, from https://unfccc.int/resources

Xu, J., & Han, R. (2019). The Influence of Place Attachment on Pro-Environmental Behaviors: The Moderating Effect of Social Media. ***International Journal of Environmental Research and Public Health, 16.*** https://www.ncbi.nlm.nih.gov/pmc/articles/PMC6950263/#:~:text=Many%20studies%20have%20shown%20that,people's%20perception%20of%20environmental%20risks.

**இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்**
96, கிருல வீதி, கொழும்பு - 05
P +94 (0)11 5 353 635 | F +94 (0)11 5 335 500
info@slpi.lk | www.slpi.lk